பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 19 புதன்கிழமை (05-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 321

# கப்பல் மீதான தாக்குதலில் புலிகள் தரப்பில் 14 பேர் பலி!

வவுனியா, நவ. 5

கடந்த ஞாயிறன்று முல்லைத்தீவுக் கடற் பகுதியில் தரித்து நின்ற சரக்குக் கப்பல் மீது விமானப் படையின் ''கிபிர்'' விமானங்கள் நடத்திய தாக்குதலில் தமது தரப்பில் 14 போராளிகள் பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்களை ''புலிகளின் குரல்'' வானொலி நேற்று வெளியிட்டது அவை வருமாறு:-

★ மேஜர் வெற்றி (சக்திவேல் - மட்டக்களப்பு)

★ கப்டன் வெற்றிக்கரசு (அம்பலவன் பாலகுமார்)

★ கப்டன் ரட்ணகுமார் (செல்லத்துரை - யாழ்ப்பாணம்)

★ கப்டன் ரவி (சிவபாதம் இராசமாணிக்கம் - புதுக்குடியிருப்பு)

★ கப்டன் இசைப்பிரியன் (ஆறுமுகதேவன் சிவகுமார் - யாழ்ப்பாணம்)

★ கப்டன் துவாரகன் (அருள்பிரகாசம் வசந்தகுமார் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் முகிலன் (ஆள்வாப்பிள்ளை குணசீலன் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் புலித்தேவன் (ஜெயபாலசேகரம் செந்தில்குமரன் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் முத்துராசா (செபஸ்ரியன் றோபேட் - கிளிநொச்சி)

★ இரண்டாம் லெப்டினன்ட் பாலசேகரன் (திருமலை)

★ வீரப்பன் (யாழ்ப்பாணம்)

★ விடுதலை (ரணசிங்கம் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் வீரன் (யாழ்ப்பாணம்)

★ கப்டன் திரைச்சிற்பி (பரமகுரு - யாழ்ப்பாணம்)

(ஐ-164)

## தாக்குதல் முறியடிப்பு

கொழும்பு, நவ. 5

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் காவலரண் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ-9)

## தாக்கியழிக்கப்பட்ட கப்பல் ருமேனியாவில் இருந்து வந்ததா?

கொழும்பு, நவ. 5

முல்லைத்தீவுக் கடலில் வைத்துக் கடந்த ஞாயிறன்று விமானப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட கப்பல் கடந்த மாதம் 23 ஆம் திகதி ருமேனியாவில் உள்ள துறைமுகம் ஒன்றில் இருந்து புறப்பட்டதாக வெளிநாட்டு உளவு நிறுவனத் தகவல்களை மேற்கோள் காட்டி ''லங்கா தீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டுக்குப் பின் பல்வேறு பெயர்களுடன் இக்கப்பல் சேவையில் ஈடுபட்டு வந்ததாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கப்பல் 1993இல் ''விலசிவலண்'' என்ற பெயரிலும், 1994 இல் ''வலஸ்'' என்ற பெயரிலும், 1995 இல் ''பிலான் போயி'' என்ற பெயரிலும் சரக்குகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்டது என்றும்—

தாக்கி அழிக்கப்பட்ட சமயம் அது ''பிரைசிசியோஸ்'' (FRAIZESEOS) என்ற பெயரில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பலில் சுமார் ஒன்றரைக் கோடி டொலர் பெறுமதியான ஆயுத தளபாடங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-164)

### பயங்கரவாத அமைப்பு என பிரகடனப்படுத்தும்

# அமெரிக்காவின் அறிவிப்பை ஆட்சேபித்து புலிகள் வழக்கு

## அந்நாட்டின் அப்பீல் மன்றில் இவ்வாரம் தாக்கல் செய்வர்

கொழும்பு, நவம்பர் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்து அமெரிக்க அரசு விடுத்திருக்கும் பிரகடனத்தை ஆட்சேபித்து புலிகள் இயக்கம் அந்நாட்டிலேயே வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக நம்பகமாக அறிய வருகின்றது.

வாஷிங்டனில் உள்ள மேன் முறையீட்டு (அப்பீல்) நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நாளை அல்லது நாளை மறுதினம் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரியவந்தது.

புலிகள் இயக்கம் உட்பட முப்பது அமைப்புகளை பயங்கரவாதக் குழுக்களாக அட்டவணைப் படுத்தும் பிரகடனத்தை கடந்த மாதம் 9 ஆம் திகதி அமெரிக்க அரசு விடுத்தது.

1996 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அமெரிக்கச் சட்டம் ஒன்றின் கீழேயே இந்தப் பிரகடனம் விடுக்கப்பட்டது.

இப்பிரகடனத்தில்—

பயங்கரவாத அமைப்பாக அட்டவணைப் படுத்தப்பட்ட இயக்கம் ஏதும் அத்தகைய பிரகடனத்தை ஆட்சேபித்து அப்பிரகடனம் செய்யப்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் டிரக் மீது சூடு! சிப்பாய் பலி! இருவர் காயம்!!

கொழும்பு, நவ. 5

மீசாலையில் இராணுவத்தினர் பயணம் செய்த டிரக் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

கண்டி வீதியில் இந்த டிரக் சென்று கொண்டிருந்த சமயம் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலை அடுத்து சாரதி கட்டுப்பாட்டை இழந்ததால் அந்த டிரக் மரம் ஒன்றுடன் மோதியது.

அதில் இருந்த மூன்று படையினர் காயமடைந்தனர் அவர்களில் ஒருவர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

(ஐ-3-9)

## 7 மாணவருக்கும் பிணை மறுப்பு!

கண்டி, நவ. 5

''ராகிங்'' கொடூரத்தால் உயிரிழந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன் வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான ஏழு சிரேஷ்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிணை வழங்க கண்டி நீதிவான் திருமதி டி. சி. மிரின்சி ஆராய்ச்சி மறுத்துவிட்டார்.

இந்த ஏழு சந்தேக நபர்களும் நேற்று கண்டி நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

பிணைவழங்க மறுத்த நீதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தோப்பூரில் தாக்குதல்

கொழும்பு, நவ. 5

மூதூரில் உள்ள தோப்பூர் பாலத்துக்கு அருகே அமைந்திருந்த பொலீஸ் காவலரண் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

பாலத்துக்குக் கீழ் பதுங்கி வந்த புலிகள் மீது படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனைத் தொடர்ந்து இரு பகுதியினருக்கும் இடையே சுமார் 3 மணிநேரத் துப்பாக்கி மோதல் இடம்பெற்றது.

(ஐ-9)

### நயினாமடுப் பகுதியில்

## கிளைமோர் தாக்குதல் ஐந்து படையினர் பலி!

கொழும்பு, நவ. 5

புளியங்குளம் — நெடுங்கேணி வீதியில் நயினாமடு என்னும் இடத்தில் நேற்று முன்தினம் உழவு இயந்திரத்தில் சென்ற விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலை நடத்தினர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய், மல்லாவியில் கடும் மழையால் வெள்ளம்!

### மக்கள் இடப்பெயர்வு

வவுனியா, நவ. 5

வன்னியின் பெரும்பாலான பகுதிகளில் நேற்றுக்காலை முதல் பெய்த அடை மழை காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாங்குளம் மேற்கு, துணுக்காய், மல்லாவி பகுதிகளில் பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அனஞ்சயன்குளம் யோகபுரம், ஒட்டறுத்தகுளம் ஆகிய பகுதிகளில் இருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இரத்மலானை ஆயுத மீட்புச் சம்பவம்

## தடுப்புக்காவலில் இருந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்!

கொழும்பு, நவ. 5

இரத்மலானை விமானத் தளத்தை தாக்கி அழிக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் சதித் திட்டத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

261/10, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த C. G. குலசிங்கம் ஆகிய எனது கறுப்பு நிறமுடைய பிரயாணப் பொதி ஒன்று 03-11-97 இல் லயன் எயர் மூலம் யாழ். வந்தவிடத்தில் யாழ். பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் [மாலை 4.30 மணியளவில்] தவறிவிட்டது. யாராவது தவறுதலாக எடுத்துச் சென்றிருப்பின் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [முக்கியமான ஆவணங்களும் மற்றும் ஆடைகளும் அடங்கியுள்ளன.]

[சி/1968]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தொண்டரம்மா

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த தொண்டரம்மா 31.10.97 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் 31-10-97 அன்று சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. திருநாவுக்கரசு (மகன்)
(படப்பிடிப்பாளர்)

வழக்கம்பரை,
சுழிபுரம்.

(50982)

## செல்வி இராசரெத்தினம் சத்தியலதா (லதா)

வேலணை மத்திய கல்லூரி விடுதிக்கருகாமையைப் பிறப்பிடமாகவும், இருபாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்டு இடம் பெயர்ந்து வவுனிக்குளத்தில் வசித்துவந்த செல்வி. இராசரெத்தினம் சத்தியலதா (லதா) கடந்த 24-10-1997 வெள்ளிக்கிழமையன்று மின்னல் தாக்கி அகால மரணமெய்தினார்.

இவர் திரு திருமதி இராசரெத்தினம், மங்கையர்க்கரசி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், சந்திரமோகன் (எஸ். எஸ். வில்சன் அன் கம்பனி பிறைவேட் லிமிட்டெட்), சாந்தகுமார் (சுவிஸ்), சத்தியரூபன் (நெதர்லாந்து), சத்தியமூர்த்தி (இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்), செல்வி சங்கீதா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 25.10-97 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வவுனிக்குளத்தில் நடந்தேறியது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திரு. திருமதி இ. இராசரெத்தினம்
(பெற்றோர்)
வேலணை, 9-ம் வட்டாரம்
(இருபாலை தெற்கு,
கோப்பாய்).

தகவல்;
சந்திரமோகன்
176, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11
(தொலைபேசி: 327662)

(சி/1969)

## கந்தையா இரத்தினம்

கீரிமலையை பிறப்பிடமாகவும், தற்போது இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சாரதி கந்தையாவின் அன்பு மனைவி இரத்தினம் 5-10-97 அன்று இராமநாதபுரத்தில் காலமானார்.

இவர் கலாஞ்சென்ற சாரதி கந்தையாவின் அன்பு மனைவியும் மற்றும் மகேஸ்வரி, செல்வராணி, பாலசுப்பிரமணியம் (கனடா), செல்வராஜா (பிரதேச சபை, தெல்லிப்பழை) ஆகியோரின் தாயாரும், சோமு, வேலாயுதபிள்ளை (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்), தவமோகனா (கனடா), ஜலயாக்குமார் ஆகியோரின் மாமியாரும், நந்தகுமாரின் (ஜேர்மனி) பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-10-97 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. செல்வராசா (மகன்)
வே. செல்வராணி (மகள்)

விசாலாச்சி மகாவித்தியாலய
ஒழுங்கை,
மல்லாகம்.

(49835)

## திருமதி இரத்தினசபாபதிக்குருக்கள் சங்கரிஅம்மா

உசன் கந்தசாமி கோயிலைச் சேர்ந்த சங்கரி அம்மா 4-11-97 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்களின் மனைவியும், சோமாஸ்கந்தக்குருக்கள் (முடிப்பிள்ளையார் கோயில், வேலணை), ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள் (கந்தசாமி கோயில், நல்லூர்). சுந்தரேஸ்வரக் குருக்கள் (துர்க்கை அம்மன் கோயில், தெல்லிப்பளை), கேதீஸ்வரக் குருக்கள் (உசன்), சாரதாம்பாள், சுசிலாதேவி, சுலோசனாதேவி, சகுந்தலாதேவி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4-11-97 செவ்வாய்க்கிழமை உசனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்
(துர்க்கை அம்மன் கோயில்,
தெல்லிப்பளை.)

(50986)

## அளவெட்டியில் மோதல்

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மோதல் சம்பவம் இடம்பெற்றது. அப் பகுதியில் தொடர்ச்சியாகச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. இதனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

மோதலை அடுத்து அப் பகுதியில் வீதிச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

(ஐ-86)

## கடும் மழையினால் தமிழகத்தில் 85 பேர் பலி!

தமிழகத்தில் பெருமழையினால் இதுவரை 85 பேர் உயிரிழந்துள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் இடி மின்னல் தாக்கி மரணமடைந்தனர்.

இறந்தவர்களின் குடும்பங்களிற்கு தலா 15ஆயிரம் ரூபா நிதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஐ-9)

## 'வடலியன்' கலைக் குழுவினர் யாழ். திரும்பினர்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ''வடலியன்'' கலைக்குழுவினர் தமது 25 நாள் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு யாழ். திரும்பியுள்ளனர்.

இக் குழுவினர் பல ஐரோப்பிய நாடுகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். (ஐ-17)

## விருது வழங்கும் விழா

நெடுந்தீவு, நவ. 5

இலங்கை, இலக்கியப் பேரவையின் 1994 ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசுகளும் விருதுகளும் வழங்கும் வைபவம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும் என இலக்கியப் பேரவையின் செயலாளர் செம்பியன் செல்வன் தெரிவித்தார்.

(ஐ-111)

## மைசூர் பருப்பு தட்டுப்பாடு

வடமராட்சி, நவ. 5

வடமராட்சிப் பகுதியில் மைசூர் பருப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முன்னர் கிலோ 40 ரூபாவுக்குப் பெறக் கூடியதாக இருந்த மைசூர் பருப்பினை தற்போது கிலோ 80 ரூபாவுக்கும் வாங்கிக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது. (ஐ-173)

## அடையாள அட்டை விவரம் பதிவு

நவாலி நவ. 5

நவாலி கிழக்கு ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் அடையாள அட்டை சம்பந்தமான படிவத்தைப் பெற்று உடன் பூர்த்தி செய்து தருமாறு இப் பிரிவு கிராம சேவையாளர்கள் அறிவித்துள்ளனர்.

[ஐ-100]

## நாய்களுக்கு தடுப்பூசி

வடமராட்சி, நவ. 5

பருத்தித்துறை நகரசபைப் பகுதி, புலோலி கிராமப்பகுதி ஆகிய இடங்களில் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரப்பரிசோதகர்களால் [illegible] இப்பணி மேற்கொள்ளப் பட்டது.

(ஐ-173)

## மின் குமிழ் தொழிற்சாலை நீர்கொழும்பில் தீக்கிரை!

நீர் கொழும்புப் பகுதியில் உள்ள மின் குமிழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நேற்று முன்தினமிரவு தீக்கிரையானது.

தீ எவ்வாறு பற்றியது என்பது இன்னமும் தெரியவில்லை. எனினும் இது ஒரு நாசகார வேலை என நீர்கொழும்புப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் தொழிற்சாலை கடந்த ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதியிலிருந்து மூடப்பட்ட நிலையில் உள்ளது. இங்கு பணிபுரிந்த ஊழியர்கள் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி என்பனவற்றைக் கோரி உரிமையாளர்களுக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

தீயினால் இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் பெறுமதி 10 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-9)

## தொழில்நுட்பக் கல்லூரி அனுமதி: தமிழ்ப்பத்திரிகைகள் மூலமும் விண்ணப்பம் கோரப்படும்

தொழில்நுட்பக் கல்லூரிகளில் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவிருக்கும் பயிற்சி நெறிகளுக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிட தொழிற்பயிற்சி, கிராமியக் கைத்தொழில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட இணக்கம் தெரிவித்துள்ளார்.

தொழில் நுட்பக் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்கள் கடந்த மாதம் 21ஆம் திகதி சிங்களப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன என்றும்— அதனால் தமிழ் மாணவர்கள் அதற்கு விண்ணப்பிக்க முடியாது போயுள்ளதாகவும்— இதன் காரணமாகத் தமிழ் மாணவர்கள் விண்ணப்பிக்க வசதியாக தமிழ்ப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, விளம்பரம் வெளியாகி 23 நாள்கள் வரை விண்ணப்பங்களை ஏற்க அவகாசம் வழங்க வேண்டும் என்றும் — யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சரைக் கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் விரைவில் இதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார்.

## 200 பேர் பலி!

ஹனோய், நவ. 5

வியட்நாமையும், தாய்லாந்தையும் தாக்கிய கடும் புயலினால் இதுவரை சுமார் 200 பேர் பலியாகியுள்ளனர்.

இவ்விரு நாடுகளையும் தாக்கிய இப்புயலுக்கு ''லிண்டா'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

புயல் மற்றும் கடும் மழையை அடுத்து சுமார் ஆயிரம் பேர்வரை காணாமற் போயுள்ளனர் இவர்களைத் தேடும்பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

அறுவடைக்குத் தயாராக இருந்த சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் அழிந்துள்ளன.

(முன்னர் வந்த செய்தி 3 பக்கத்தில்) (ஐ-9)

D. M. I.
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2000
கலை, வர்த்தகப் பிரிவுகள்
மாணவர்களே!
உங்கள் வகுப்புக்கள் ஆரம்பமாக இன்னும் 66 தினங்களே உள்ளன.
குறிப்பு:-
உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் சாதகமாக அமைய எமது வாழ்த்துக்கள்.
- D. SAM
(சி/1967)

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா தருமலிங்கம்

(சங்கரத்தை, வட்டுக்கோட்டை)

சங்கரத்தை வட்டுக்கோட்டையை. பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தருமலிங்கம் 4-11-97 அன்று நண்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இராசையா - இராசம்மா தம்பதிகளின் புதல்வியும், செல்லத்துரை தருமலிங்கம் (இ. போ. ச.) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சோமசுந்தரம் (பாலன் மில், வட்டுக்கோட்டை), கனகலிங்கம் (இந்தியா), கார்த்திகேசு (வருமானவரி ஆணையாளர், யாழ்ப்பாணம்), கனகம்மா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் வெள்ளியம்பலம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகுந்தலாதேவி - பொன்னுத்துரை, ஸ்ரீஸ்கந்தராசா (நோர்வே), ரதிமதி-கேதீஸ்வரன் (உப தபால் அதிபர், திருநகர், கிளிநொச்சி), எதிர்வீரசிங்கம் (ஜேர்மனி), வளர்மதி - கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை (பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவெட்டி), தவராணி (நோர்வே), கேதீஸ்வரன் (கிளிநொச்சி), கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05-11-97) புதன்கிழமை காலை 11 மணியளவில் வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
செ. தர்மலிங்கம்

சங்கரத்தை.

(50987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்நாமை கடும் புயல் தாக்கியது!

## 17 பேர் பலி! 200 பேர் மறைவு!!

ஹனோய், நவ. 5

தெற்கு வியட்நாம் பகுதியைக் கடும் புயல் தாக்கியுள்ளது. 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 200 பேர் பற்றிய தகவல் தெரியவில்லை, கடலில் மீன் பிடிக்கச் சென்ற 700 படகுகளையும் காணவில்லை.

கடந்த நூறு ஆண்டுகளில் வியட்நாம் நாடு சந்திக்கும் மோசமான அழிவு இது என அறிவிக்கப்படுகின்றது. ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்விடங்கள் தரைமட்டமாகியுள்ளன. [ஐ-9]

### லொறிஓட்டுநர் வேலை நிறுத்தம்:

# வீதிப் போக்குவரத்து பிரான்ஸில் ஸ்தம்பிதம்

பாரிஸ், நவ. 5

பிரான்ஸில் லொறி ஓட்டுநர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் நாடு முழுவதும் பரவியுள்ளது.

அயல் நாடுகளில் இருந்து பிரான்ஸுக்குள் செல்லும் முக்கிய பாதைகளிலும் எரிபொருள் நிலையங்களுக்குச் செல்லும் வீதிகளிலும் அவர்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தியிருப்பதால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அதிகாரிகளுடன் நடந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததை அடுத்து எல்லாமாக 135 இடங்களில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிரான்ஸில் லொறி ஓட்டுநர்கள் கடந்த ஆண்டிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்களது போராட்டம் 12 நாள்கள் நீடித்தது. இம்முறை அது மேலும் அதிக நாள்கள் நீடிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ஐ)

# 50 அணுகுண்டுகளை தயாரிக்கும்

# யுரேனியம் இந்தியாவிடம் உள்ளது

### பாதுகாப்புத்துறை அதிகாரி தகவல்

புதுடில்லி, நவ. 5

இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிடம் அணு ஆயுதத் தயாரிப்புக்கான தரத்திலுள்ள 450 கிலோ புளூட்டோனியம் இருக்கும். இது 50 அணு குண்டுகள் தயாரிப்பதற்கான திறன் கொண்டதாகும்.

பாதுகாப்புத்துறைஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த சவீதா

**உலக அரங்கில்**

பாண்டே இதுகுறித்து தெரிவித்துள்ளதாவது—

அணு குண்டு தயாரிப்புக்கு புளூடோனியம்மற்றும்செறிவூட்டிய யுரேனியம் ஆகிய கதிரியக்கப் பொருள்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன.

அணு ஆயுதத் தயாரிப்பில் இந்திய விஞ்ஞானிகள் முன்னேற்ற நிலையைக் கண்டுள்ளனர். 1974 ஆம் ஆண்டு ராஜஸ்தானில் உள்ள பொஹ்ரான் பாலைவனத்தில் அணுகுண்டு வெடிப்புச் சோதனையை இந்தியா நடத்தியது. அதைவிட தற்போது அணு ஆயுத தயாரிப்புத் தரம் மேம்பட்டிருக்க வாய்ப்புண்டு.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவும் முன்னாள் சோவியத் யூனியனும் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டு விட்டன. நமது நாட்டில் அணுகுண்டுச் சோதனையை முழு அளவில் நடத்தாத நிலையில், மேற்கண்ட நாடுகளின் தரத்தை விட மேம்பட்ட அளவில் நமது அணு ஆயுதத் தயாரிப்பு இருக்கும் என்பது ஐயமே.

மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் தான் அணு ஆயுதத் தயாரிப்புக்கு பயன்படக்கூடிய புளூட்டோனியம் தயாராகிறது என்றார் (ஐ)

# தாய்லாந்து பிரதமர் பதவி துறக்கின்றார்!

பாங்கொக், நவ. 5

தாய்லாந்துப் பிரதமர் சவாலிங் ஜோன்சே யூ நாளை பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

புதிய பிரதமர் பதவி ஏற்க வசதியாக தாம் பதவி துறப்பதாக அவர் தெரிவித்தார். தமது இந்த முடிவை வியாழனன்று மன்னரிடம் நேரில் தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 11 மாதங்களாகப் பதவி வகித்து வரும் பிரதமர் சவாலிங் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக அழுத்தத்தைச் சந்தித்துள்ளார்.

# நெடுந்தீவு பின்தங்கிய பிரதேசமா? வளங்களைத் தந்து பாருங்கள்!

### கல்வி அதிகாரி சொல்கிறார்

நெடுந்தீவு, நவ. 5

நெடுந்தீவு பின்தங்கிய பிரதேசம் என்னும் கூற்றை என்னால் ஏற்க முடியவில்லை. ஆற்றலும், விவேகமும் கொண்ட மக்கள் வாழும் பிரதேசம் எப்படி பின்தங்கிய பகுதியாக இருக்கும்?

நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்திய நெடுந்தீவு கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வளங்கள் இல்லாத இடத்தில் இருந்து கொண்டுதான் இன்றைய நிகழ்வுகளைச் சிறப்பாகச் செய்துள்ளோம். ஆற்றல்கள், திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் இங்குள்ள மாணவர்கள் இந்தக் கிராமத்திற்கும் எமது இனத்திற்கும் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய பெருமையை எண்ணிப் பார்க்க வேண்டும் — என்றார்.

யாழ். வலயம் ஒன்றின் உடற்கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா பேசும் போது சொன்னதாவது:

தளராதஉழைப்பும் முயற்சியும் கொண்டவர்களாக எடுத்த கருமத்தைத் திறமையுடன் முடிக்கும் ஆற்றல் மிக்கவர்களாக இங்குள்ள மாணவர்கள் விளங்குவதை என்னால் அவதானிக்க முடிந்தது. பல்வேறு துறைகளிலும் திறமைமிக்க இந்த மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளை வலியுறுத்துவேன் — என்றார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் பேசும் போது —

விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல்வேறு உதவிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களும், யாழ். அரச அதிபரும் நெடுந்தீவுப் பகுதிக்கு வழங்கியுள்ளனர். உடற்கல்விப் பணிப்பாளர் இரு தினங்கள் தங்கி மாணவர்களின் குறை நிறைகளை அவதானித்துள்ளார். சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத போதும் திறமையாக ஆடி பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளனர். ஓர் உடற்பயிற்சி ஆசிரியர் மட்டுமே இங்கு உள்ளார். மேலும் ஓர் உடற்பயிற்சி ஆசிரியரைத் தரவும், சைவப்பிரகாச வித்தியா சாலைக்கென விளையாட்டு மைதானத்தை பெற்றுக் கொள்ளவும் கல்வித் திணைக்களம் உதவ வேண்டும் — என்றார்.

உடற்பயிற்சி ஆசிரியர் க. அரசரத்தினம் நன்றியுரை வழங்கினார். (அ-11)

## கந்தஷஷ்டி சொற்பொழிவு

வடமராட்சி, நவ. 5

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் கந்தசஷ்டி விரத காலத்தை முன்னிட்டு நடத்தி வரும் விசேட சொற்பொழிவு வரிசையில்—

5 ஆம் நாளான இன்றுபுதன் கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திரு முருகன் "சிவகதி" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். இந் நிகழ்வுக்கான ஆசியுரையை உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அதிபர் கி. நடராசா நிகழ்த்துவார்.

6 ஆம் நாளான வியாழக் கிழமை சிறுப்பிட்டி சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினரின் "பார்வதி கல்யாணம்" என்ற தலைப்பிலான வில்லிசை இடம்பெறும். இந் நிகழ்வுக்கான ஆசியுரையை வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை நிகழ்த்துவார். (ஐ-173)

## குத்தரிசி விலை உயர்வு

யாழ். குடாநாட்டில் நாட்டரிசியின் விலை அதிகரித்துள்ளது.

சில்லறைக்கு கிலோ 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த நாட்டரிசி இப்போது 37 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஐ)

## அறநெறி ஆசிரியர் கருத்தரங்கு

யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாத்திரம் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர். யாழ் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அழைப்புக்கடிதங்கள் கிடைக்காதவர்கள் நாளை வியாழக் கிழமைக்கு முன்னர் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ஐ-100)

### கடந்த ஒருவார காலமாக

# உணவுக் கப்பல்கள் பருத்தித்துறைக்கு வரவில்லை

வடமாராட்சி நவ. 5

பருத்தித்துறை துறைமுகத்துக்கு கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேலாக உணவுக் கப்பல்கள்ஏதும் வரவில்லை.

கடைசியாக 'ஒஷன்கரியர்' என்ற கப்பல் தனியார் வர்த்தகர்களுக்கான உணவுப் பொருள்கள் உட்படப் பல்வேறு பொருள்களை இறக்கி விட்டு யாழ். உற்பத்திப் பொருள்களுடன் கொழும்புக்குத் திரும்பிச் சென்றது. இக் கப்பல் கொழும்புக்குத் திரும்பிச் சென்று ஒரு வார காலத்துக்கு மேலாகியும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் வேறு கப்பல்கள் ஏதும் வந்து சேரவில்லை. [ஐ-173]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கருத்தரங்குத் தொடரில் மூன்றாவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் நடைபெறும்.

'வயது வந்தோருக்கான கற்பித்தல் முறையியல் ஓர் அணுகுமுறை' எனும் தலைப்பில் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில், பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர் நந்தகுமாரன், முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் செல்வி என். சண்முகம், வணிகத்துறை விரிவுரையாளர் எஸ். சிவராசா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

பல்கலைக்கழக, கல்லூரி பாடசாலை ஆசிரியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் இத்துறை ஆர்வலர்களும் கலந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நூல்கள் அன்பளிப்பு

அச்சுவேலி, நவ. 5

பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக பொது நூலகத்திற்கு சுமார் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை பொது மக்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சர்வதேச நூலக தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடம் இருந்து நூலகத்திற்கு நூல்கள் சேகரிக்கப்பட்டன. (ஐ-11)

## சமய நிகழ்வுகளில்

வடமராட்சி, நவ. 5

கந்தசஷ்டியை முன்னிட்டு வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பல ஆலயங்களில் நாளை வியாழக்கிழமை சூரன்போரும், மறுநாள் வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளன.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயம், துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில், மருதடி சந்தசுவாமி கோயில், புலோலி தெற்கு முருகையா கோயில், தும்பளை முருகன் கோயில் ஆகியவற்றில் சூரன் போரும், திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-173)

★ ★ ★

ஏழாலை மத்தி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் எழுந்தருளிக்கும் பரிவார மூர்த்திகளுக்கான கும்பாபிஷேகப் பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறும்.

ஆலயத்தில் புதிதாக விநாயகப் பெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் அமைக்கப் பெற்ற கோயில்களுக்கான கும்பாபிஷேகம் நாளை இடம் பெறும்.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இன்று புதன்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் விசேட அபிஷேக ஆராதனைகளும், அலங்கார உற்சவமும் இடம்பெறும். (ஐ-30)

# சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கு வடமராட்சியில் பயிற்சி பட்டறை

வடமராட்சி, நவ. 5

வடமராட்சி சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நான்கு நாள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி மேல் மாடிக்கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் நியமனம் பெற்றபருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony (20×20), National (21,50) கலர் T.V. க்களும், N.V 300 டெக்கும் விற்பனைக்குண்டு. தொடர்பு: N. கிருஸ்ணா சிவன்கோயிலடி, சாவகச்சேரி. [50959]

முதிரைக் கதிரை செற், கட்டில், படிப்பதற்குரிய மேசை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.25, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [50960]

### தவறிவிட்டது

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் வயானந்தநாதன் என்பவரது 640893311V இலக்கமுடைய, தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் நல்லூரில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள், சாவகச்சேரி பரம்ஸ் கடையில் ஒப்படைக்கவும். [சி/1955]

ஒரு தொகைப் பணமும் முக்கிய ஆவணங்களும் அடங்கிய பிறவுண் கலர் பேர்ஸ் ஒன்று 29-10-97 இல் மானிப்பாய்ச் சந்திக்கும், மூத்த நாயனார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ப. சதிர்காமநாதன், V.S.K. மானிப்பாய். [50963]

### திருமண சேவை

சகல மதத்திலும் சகல உத்தியோகத்திலும் மணமக்கள் உண்டு. பழைய தொடர்புள்ளவர்களும் எம்மை நேரில் வந்து சந்திக்கவும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [50977]

### தேவை

திருமண சேவையில் பணிபுரிவதற்குப் படித்த பெண்பிள்ளை தேவை. தொடர்பு: ''துர்க்கா திருமண சேவை'' 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [50976]

### நூலகம்

தரமான நூல்களை வாசித்து வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்ய நாடுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, 41, தபாலக வீதி, சாவகச்சேரி, Lin8 Lending Lip-rery. [50932]

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் கதைக்க எழுதப் பயில புதிய வகுப்பு ஆரம்பம். 10 மாணவர்கள் மட்டும் ஒரு வகுப்பில் அனுமதி. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (50979)


கணக்கீடு
பங்குடைமை
சனி, ஞாயிறு பிரிவு
**A,L 99' 98**
புதிய பிரிவு
ஆரம்பம்: 8—11—1997
சனி காலை 8 மணி
ஆசிரியர்:
D. SAM,
**D. M. I.**
233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1941)


## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 06 — 10 — 1916

உதிர்வு: 15 — 11 — 1996

### அமரர் தாமோதரம்பிள்ளை மயில்வாகனம் (சின்னராசா)

திதி: 5-11-1997

அன்பும், பண்பும், கடமை உணர்ச்சியும், கட்டுப்பாடும், மறவாத தெய்வ வழிபாடும் கொண்ட எமது தந்தைக்கு இருகரம் கூப்பி மலர் அஞ்சலிசெலுத்துகின்றோம்.

ம. கணேசமூர்த்தி ம. பத்மராசா
லோ. ஜெயந்தி (கனடா), ம. ரகுதாஸ் (லண்டன்)
ம. ரவிதாஸ் (லண்டன்), ம. ஜெயதாஸ்
(மொறட்டுவ பல்கலைக் கழகம்.)
அமரரின் மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரன், உறவினர்களும், அன்பர்களும்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

(50948)

## நிவாரணத்துக்கு இம்முறை பருப்பு வழங்கப்படவில்லை

மீளக் குடியமர்ந்தோருக்கான நிவாரணத்திற்கு வழங்கப்படும் பச்சை அரிசியின் விலை கிலோ 24 ரூபா 25 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இதே வேளை இம்முறை மைசூர் பருப்பு வழங்கப்படவில்லை.

அரிசி, சீனி, லக்ஸ்பிறே ஆகியன மட்டுமே வழங்கப்படுகின்றன.

48 ஏ, பி, ஆகிய முத்திரைகளுக்கான மேற்படி பொருள்கள் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் வழங்கப்படுகின்றன.

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சலவைச் சேவை - 1998

#### சுகாதார சேவைகள் பிரிவு யாழ்ப்பாணம்

1998 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மு.ப 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதி விவரங்களைச் சமர்ப்பித்து உரிய கேள்விப் பத்திரப் பணத்தைச் செலுத்தி 11-11-97 முதல் இப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். முழு விவரங்களையும் அலுவலக நாள்களில் பார்வையிடலாம். கேள்விப் பத்திரங்கள் 20-11-97 நண்பகல் 12.00 மணி வரை விநியோகிக்கப்படும்.

வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்.

46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/1957]

## நினைவஞ்சலி

### 21 ஆம் மாதம்



அமரர்

### தம்பிப்பிள்ளை சின்னராசா

(ஸ்தாபகர்: கமா ஸ்ரோர்ஸ் — சிலாபம், ராஜா கிறீம் ஹவுஸ் — யாழ்ப்பாணம்)

தோற்றம்: 13—07—1922

மறைவு: 01—02—1996

குளிர்களி உலகினிலோர் ராஜாவாகி
ஊரெல்லாம் உன்பெயர் சொல்லவைத்தாய்
குளிர்ந்திட்ட நெஞ்சமெல்லாம் கொதிக்குதையா
உருகியோ எம்மைவிட்டு ஓடிவிட்டாய்.

ராஜா கிறீம் ஹவுஸ்,
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### முதலாம் வருடம்



அமரர்

### சின்னராசா குமரதாஸ்

(B. Sc. Hons. Cey.)

தோற்றம்: 01—05—1967

மறைவு: 05—11—1996

பட்டங்கள் பெற்ற பின்பும் பரிதாபம்
அப்பாவி போலவுனைக் காத்து நின்றோம்
திட்டங்கள் சிதைத்து நீ போனவிடம்
இப்போதும் புரியாமல் தவிக்கின்றோம்:

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(50975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியின் பற்றாக்குறைகள் நீங்கும்

## மேலதிகச் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பல்வேறு வகைப்பட்ட பற்றாக் குறைகள், குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி கிருகாம்பிகை பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

வைத்தியசாலையில் உண்மையில் ஒவ்வொரு தரத்திலும் ஊழியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு மற்றும் பலவகைப்பட்ட குறைபாடுகளும் காணப்படுகின்றன.

இந்தக் குறைபாடுகளை நீக்குவது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வருவேன் — என்றார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் தீபாவளி தினத்தன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்திருந்தது தெரிந்ததே.

வைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டதற்கு அமைவாகவே தாம் இந்த விஜயத்தை மேற்கொண்டதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நோயாளர்களை தாதிகள், சிற்றூழியர்கள் சேவை மனப்பான்மையுடன் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள், நோயாளர்களின் நலன்களை முன்வைத்துப் பணிபுரிய வேண்டும். அவ்வாறு பணி செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் —

நோயாளர் நலன் பாதிக்கப்படும் போது ஆஸ்பத்திரி நிர்வாகம் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்—எனவும் மேலதிக செயலாளர் டாக்டர் கிருகாம்பிகை பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார். (அ-17)

### திருநெல்வேலி அம்மன் கோயில்

## உண்டியலை உடைக்க முயன்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், நவ. 5

கோயில் உண்டியல் பணத்தைத் திருட முயன்றவர்களில் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் திருப்பணி உண்டியலை நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் உடைத்து அதிலிருந்த பணத்தைத் திருட முயன்ற போதே அடியவர்கள் சிலரால் இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும் தற்காலிகமாகக் கந்தர் மடத்தில் வசிப்பவருமான இவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-ரீ)

### யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின்

## காணாமற்போன லொறி வவுனியாவில் உள்ளதாம்

அரியாலை, நவ. 5

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று தற்போது வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

1995 ஆம் ஆண்டு இறுதியில் குடாநாட்டில் இடம் பெற்ற ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது இந்த லொறி காணாமற் போயிருந்தது.

தற்போது இந்த லொறி வவுனியாவில் இருப்பது தெரியவந்ததை அடுத்து அந்த லொறியைப் பெறுவதற்கு யாழ். ப. நோக்கு கூ. சங்க தலைவர் சி. வி. கே. சிவஞானம் முயற்சி எடுத்துள்ளார்.

இதேவேளை, யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குப் போதிய வாகன வசதியின்மையால் சங்க அலுவல்கள் பாதிக்கப்படுகின்றன.

தற்போது சங்கத்தின் ஒரு வாகனமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. (ஐ-17)

## ரெலோவின் பெயரை பயன்படுத்திக் கொள்ளை

### மட்டக்களப்புப் பகுதியில் சம்பவம்

ரெலோ இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி மட்டக்களப்பு எருவில் கிராமத்தில் வீடொன்றில் கடந்த ஞாயிறு இரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ரூபா 1 இலட்சம் 27 ஆயிரம் ரொக்கம், 75 பவுண் தங்க நகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தாம் ரெலோ உறுப்பினர் என்றும்-

வீட்டைச் சோதனையிடப் போவதாகவும்-கூறி வந்தவர்களே பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றதாக முறையிடப்பட்டுள்ளது. (இ-21)

## சமயப் பேருரை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்துசமயப் பேருரையும், இலக்கியச் சொற்பொழிவும் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய நாள்களில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

முதல் நாள் இடம்பெறும் இந்துசமயப் பேருரையில் ''இந்துசமயமும், கவின்கலைகளும்'' என்னும் பொருள் பற்றி கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளையும், இரண்டாம் நாள் இடம்பெறும் இலக்கியச் சொற்பொழிவில் ''இலங்கையின் மரபுவழிக் கவிதைகள்'' என்னும் பொருள் பற்றி யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் சொற்பொழிவாற்றுவர். [ஐ-100]

# இன்றைய நிலையில் இளைஞருக்கு விளையாட்டுப்போட்டிகள் அவசியம்

### சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 5

''யுத்த அழுத்தங்களில் இருந்து முழுமையாக எமது மக்கள் இன்னும்விடுபடமுடியவில்லை.'' இத்தகைய நிலையிலும் இளைஞர்களின் உடல், உள வளர்ச்சிக்காக விளையாட்டு, பேச்சுப்போட்டிகளை நடத்துவது வரவேற்கத்தக்கது. இந்த வகையில் திருநகர் மக்கள் இத்துறைகளில் நாட்டம் கொண்டுள்ளதையிட்டுப் பெருமைப் படவேண்டும்.''

இவ்வாறு ஈ. பி. டி. பி. அமைப்பின் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். பாரதி சனசமூக நிலையத்தின்40ஆவதுஆண்டு விழா அண்மையில் நடந்த சமயம் அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனசமூக நிலையத் தலைவரின் வழிபாட்டின் பின்னர் சனசமூகநிலையக் கொடியை ஈ.பி.டி.பி. குருநகர் அமைப்பாளர் றீகன் ஏற்றிவைத்தார்.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மாநகரசபை ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம், ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுந்தரமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி புனரமைப்புச் செய்யப்பட்ட நூல் நிலையத்தைத் திறந்துவைத்தனர்.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாக வண. பிதா கிறிஸ்தோபம் கலந்துகொண்டார். அருட்சகோதரிகள், ஈ.பி. டி.பி. அமைப்பாளர்கள் றீகன், ரங்கன், சுந்தரமூர்த்தி ஆகியோரும், புளொட் மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பி. உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றும் போது:-

எமது மக்களின் துன்பங்களில் பங்காளராகி அவர்களது சுமைகளை நீக்கி கௌரவமான மேம்பாடான வாழ்க்கைக்கு உழைக்குமாறு எமது செயலாளர் நாயகம் எம்மைப் பணித்துள்ளார். அவ்வாறே நாம் பணியாற்றுகின்றோம். யாழ். குடாநாட்டில் எமது கட்சி மட்டுமே அரசியல் ஆத்ம பலத்தைக் கொண்டுள்ளது என்றார்.

யாழ். பேராலய பங்குத் தந்தை, யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், புளொட் மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா ஆகியோரும் இவ் விழாவில் உரையாற்றினர். (இ-5)

# 'ராகிங்' கொலைக் கொடுமை; யாழ்ப்பாணத்து உணர்வலை

## தடுப்பதில் தீவிரம் காட்டும் பல்கலைக்கழக ஆசிரியர்கள்

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் 'ராகிங்' குறித்துத் தெரிவித்ததாவது:-

'ராகிங்' (பகிடிவதை)என்பது தற்போது பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றி வேறும் பல கூடங்களில் ஒரு நாகரிகம் போலப் பரவிவிட்டது. இது முற்று முழுதாக எமது சமூகத்திலிருந்து நீக்கப்படவேண்டும்.

இப் பகிடிவதையை நீக்குவதற்கு எமது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார்கள். விரிவுரையாளர்கள் இச் செயலை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு புதிய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விரிவுரையாளர்கள் பகிடிவதை புரியும் சிரேஷ்ட மாணவர்களைத் தண்டிக்க முற்படும் போது புதிய மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களைத் காட்டித்தர முன்வருவதில்லை. இதனால் விரிவுரையாளர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் உள்ளது.

இம் முறை புதிதாக வந்து பகிடிவதைக்கு உள்ளாகும் மாணவர்கள்தான் மறுமுறை இப் பகிடிவதையை புரிவதற்கு முன்னிற்கின்றார்கள். எனவே புதிய மாணவர்கள் தாம் இனிமேல் வரப்போகின்ற மாணவர்களிடம் பகிடிவதை புரிவதில்லை எனத்திடசங்கற்பம் பூண்டு செயற்படவேண்டும்.

பொதுவாக புதிய மாணவர்களை வரவேற்று நிகழ்த்தப்படும் வரவேற்பு விருந்துபசாரத்தை(welcome Party) குறுகிய காலத்தினுள் நடத்துவதன் மூலமும் பகிடிவதைக் காலத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

இதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முயற்சி எடுக்க வேண்டும். எவ்வாறெனினும் மாணவர்கள் முன்வந்து இச் செயலை முற்றாகக் கைவிடுவதே சிறந்தது — என்று அவர் சொன்னார் ★

## குற்றங்களை மறைப்பதா?

பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் ஆனந்தன் இப்படிக் கூறுகிறார்:

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு மாணவனும் எத்தனையோ கற்பனைகளை எல்லாம் தன் மனத்தில் உருவகித்துக் கொள்கின்றான். சகல கலைத் துறைகளில் எல்லாம் தன்னிகரில்லாத ஒரு வளர்ச்சியைப் பெற வேண்டும் அதன் மூலம் தான் பிறந்த தேசத்திற்கும், தன்னைப் பெற்ற பெற்றோருக்கும், கல்வி ஊட்டிய கல்லூரிகளுக்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டுமென எண்ணுகின்றான்.

இந்த எண்ணங்களை எல்லாம் குறுகிய காலத்தில் தவிடு பொடியாக்கி ஒருவனை மனநோயாளியாகவோ அன்றி தற்கொலை செய்யும் நிலைக்கோ உள்ளாக்கி விடும் கொடூரம் 'ராகிங்' எனப்படும் பகிடிவதை யெனில் மிகையில்லை.

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள பல்கலைக் கழகங்கள், கல்விக்கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இன்னும் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் இப் பகிடிவதைக் கொடூரம் மறைமுகமாகவும், நேரடியாகவும் இடம்பெற்று வருகின்றது.

மறைமுகமாக இடம் பெறும் சில கொடூரங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறல் வதை கூடாது

யாழ். பல்கலைக்கழக வர்த்தக இரண்டாம் வருட மாணவன் ஒருவரின் கருத்து வருமாறு:

''ராகிங்' (பகிடிவதை) பல்கலைக் கழகத்தில் இருந்து முற்றாக நீக்கப்படவேண்டும் எனக் கூறுவது புதிய மாணவர்கள் பழையமாணவர்கள் மத்தியில் எந்தவிதமான நட்பையும் வளர்க்காமல் தடுப்பதற்கு வழிவகுத்து விடும்.

பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு வரும் புதிய மாணவர்கள் மிதந்த கூச்ச சுபாவத்துடனும் பயந்தவர்களாகவும் காணப்படும் போது அளவான முறையில் பகிடிவதைக்கு உள்ளாக்கப்படும்போது அவர்கள்அனைவருடனும் பழகுவதற்குத் தயாராகின்றார்கள். இந்த நல்ல நோக்கில் பகிடிவதை மேற்கொள்ளப்படும்போது எந்த விதமான ஆபத்தும் ஏற்பட மாட்டாது,

ஆனால் சில மாணவர்களின் அத்துமீறிய செயல்களினால், வதைகளினால் தான் சில பிரச்சினைகள் எழுகின்றன. எனவே சிரேஷ்ட மாணவர்கள் அளவோடு பகிடிவதையை மேற்கொள்ளலாம் என நான் நினைக்கிறேன் என்றார் ★

பேராதனைப்பல்கலைக் கழக மாணவன் செல்வவிநாயகப்பிரகாசம் வரப்பிரகாஷ் 'ராகிங்' கொடுமைக்குப்பலியான சம்பவம்அகிலஇலங்கை மட்டத்தில் கல்விச் சமூகத்தினரிடையே மட்டுமன்றி பெற்றோர்கள், சாதாரண மக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியையும் மனவேதனையையும் உண்டாக்கியுள்ளது.

'ராகிங்' கொலைச் சம்பவம் தென்னிலங்கையில் அதற்கு எதிரான உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், துக்கம் அனுஷ்டிப்பு முதலிய போராட்டங்கள் நடைபெற்றன: நடைபெறுகின்றன.

கொலையுண்டவரும், 'ராகிங்' செய்தவர்களும் தமிழ் மாணவர்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் அதற்கு எதிரான உணர்வலை உரிய அளவில் வெளிப்படவில்லை.

'ராகிங்' தடை செய்யப்பட வேண்டும்; நிறுத்தப்பட வேண்டும் என்று 'உதயன்' கடந்த பல வருடங்களாகவே ஆணித்தரமாக எடுத்துக் கூறிவருகிறது.

'சஞ்சீவி'யில் வெளியான 'யாழ்ப்பாணத்தின் உணர்வலைகள்' தொடர்ந்து உதயன் மூலம் படம் பிடித்துக் காட்டப்படும்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவும் பிரபாகரனும் நேரடியாகப் பேசவேண்டும்

## அமைதிக்கு அதுவே வழி என்கிறார் – தொண்டமான்

கோவை, நவ. 5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதன் மூலமே இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும்.

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த அவர் கோவையில் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூற விடுதலைப் புலிகளின் தரப்பில் ஜனநாயகப் பிரதிநிதி யாரும் இல்லை. அதுவே, அமைதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பெரும் தடையாக உள்ளது.

பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்ததால் தான் அவர்கள் ஆயுதம்ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தியாவிலிருந்து வந்த மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை. அவர்களுக்குக் குடியுரிமை வழங்க இது தொடர்பாக முந்தைய அரசுகள் செய்து கொண்ட உடன்பாடுகள் தோல்வியில்முடிவடைந்தன. 1958 – இல் இயற்றப்பட்ட சட்டம் இந்திய வம்சாவளியினரை இலங்கைக் குடிமக்களாக அங்கீகரித்தது, அதன் பிறகு, தமிழர்களின் சம உரிமைக்காகப் போராடக் கூடிய டி. யு. எல், எப் தலைவர்களை யாழ்ப்பாணத் தமிழர்கள் தேர்ந்தெடுத்தனர்.

இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டதால் ஜனநாயகம் தோல்வியடைந்தது. இலங்கையில் இனப்பிரச்சினைதீர வேண்டுமானால், சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கை ஏற்பட வேண்டும். விரைவில் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு அமெரிக்க இராணுவம் கெரில்லாப் பயிற்சி அளிப்பது. இரு அரசுகள் தங்கள் பிரச்சினைகளுக்காக உதவி செய்து கொள்வது குறித்து யாரும் கேள்வி எழுப்ப முடியாது.

இலங்கை அரசும், பிரபாகரனும் மட்டுமே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அமைதிப் பேச்சுவார்த்தைக்கு மிக முக்கியமான நிபந்தனை, இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

சந்திரிகா தலைமையிலான இலங்கை அரசு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண மிகவும் தைரியமான நடவடிக்கை எடுத்து அமைதியை ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகிறது என்றார். (ஐ)


# வாழ்த்துகின்றோம்

## அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை

எதிர்வரும் 13 – 11 – 97 அன்று நடைபெறும் வெள்ளி விழாவில் ஸ்தாபகர் கௌரவிப்பு, வெள்ளி விழா மலர் வெளியீடு, பரிசளிப்பு சமயக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் என்பன சிறப்புற வாழ்த்துகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**கணாதீபன் அச்சகம்**

மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய்.

(சி/ 1950)



உ

## அளவெட்டி, கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம்

# பிராயச்சித்த அபிடேகம்

★ **07 - 11 - 97** வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மருந்து சாத்துதல்

★ **07 - 11 - 97** வெள்ளி பி.ப. 2-00 மணி தொடக்கம் **08 - 11 - 97** சனி மாலை 4–00 மணி வரை எண்ணெய் சாத்துதல்

★ **09 - 11 - 97** ஞாயிறு காலை 9-00 மணி முதல் பிராயச்சித்த அபிஷேகம்

அடியார்கள் வருகை தந்து, இயன்ற உதவிகள் புரிந்து பெருமானின் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாக சபையினர்.

(50973)



# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல் - 1998

## சுகாதார சேவைகள் பிரிவு யாழ்ப்பாணம்.

1998 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10-30மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதி விவரங்களைச் சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக 50ரூபாவும், மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமாக 250ரூபாவும் செலுத்தி **11-11-97** முதல் இப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். முழு விவரங்களையும் அலுவலக நாள்களில் பார்வையிடலாம். கேள்விப் பத்திரங்கள் **20 - 11 - 97** நண்பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும்.

வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்.

46, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1958)


# வல்லை வீதியில் மதகு புனரமைப்பு

வல்லை முச்சந்தி – பருத்தித்துறை வீதியில் உள்ள மதகின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இம் மதகு சேதமடைந்திருந்ததைத் தொடர்ந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இதற்கான புனரமைப்பு வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டிருந்தது.

இப் புனரமைப்பு வேலை பூர்த்தியடைந்துள்ளதைத் தொடர்ந்து இன்னும் சில வாரங்களில் இம் மதகு வாகனப் போக்குவரத்துக்காக திறந்து விடப்படும்.

மதகு புனரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு அருகில் தற்காலிக பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ – 173)

# கோப்பாயில் மேலும் 800 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் மேலும் 800 குடும்பங்களுக்கு 5000 ரூபா வழங்கப்படவுள்ளது. பிரச்சினைகளின் போது முதலில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு முதலில் இப் பணம் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவிற்கிணங்க பிரதேச செயலர் பிரிவின் வடக்குப் பகுதியிலிருந்து விநியோகம் ஆரம்பிக்கப்படும் என உதவித் திட்டப் பணிப்பாளர் கூறினார்.

இதுவரையில் வெவ்வேறு கிராமசேவை உத்தியோகத்தர்கள் பிரிவிலிருந்தும் பகுதி பகுதியாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதனால் பல முறைப்பாடுகள் எழுந்தன. இப்போதைய நடைமுறையின்படிஒருகிராம சேவை உத்தியோகத்தரின் பிரிவிலுள்ள சகலரும் ஒரே நேரத்தில் பயன் பெறுவர்.

(ஐ-154)

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு நிதி ஒதுக்க வாக்குறுதி

வடமராட்சி, நவ. 5

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. சிவதாசன் அண்மையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளையும், தேவைகளையும் கேட்டறிந்தார்.

குறைகளையும், தேவைகளையும் விரிவாக எடுத்துக் கூறிய வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கதிரைவேற்பிள்ளை இவ் வைத்தியசாலையில் நீண்டதொரு திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட கழிவு வடிகாலமைப்புத் திட்டம் பூர்த்தி செய்யப்படாதிருப்பதையும் குடிநீர் பெறுவதற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், மோட்டர்கள் பற்றாக் குறையையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டினார்.

அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதாக சிவதாசன் எம். பி. உறுதி அளித்தார்.

(ஐ-173)

# சந்தைகளில் திராட்சைப்பழம்

வடமராட்சி, நவ.5

யாழ். குடாநாட்டில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திராட்சைப்பழச் செய்கை ஆரம்பமாகியுள்ளது

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள், இடப் பெயர்வுகள் காரணமாக திராட்சைப் பழச் செய்கை முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது வலிகாமம்பகுதியில் திராட்சைப்பழச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து சந்தைகளில் ஒரு கிலோ திராட்சைப்பழம் நூறு ருபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

(ஐ – 173)

# வதிவிட அத்தாட்சிப் பத்திரம் இல்லை

மல்லாகம், நவ. 5

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்களிடம் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னும்வதிவிட அத்தாட்சிப் பத்திர புத்தகங்கள் வழங்கப்படவில்லை.

இதனால் நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும் பரீட்சார்த்திகள் இந்தப் பத்திரம் பெறுவதில் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

(ஐ-86)

## குற்றங்களை....

(4 ஆம்பக்கத் தொடர்ச்சி)

மேடைக்கு வருவதில்லை. அவை அறைகளினுள்ளேயே முடங்கி விடுகின்றன. இக் கொடூரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது எதிர்கால வாழ்வை நோக்கி அவற்றை மனத்துள்ளேயே அடக்கி விடுகின்றனர்.

எனினும் சில சம்பவங்கள் வெளியில் வருவதைத் தடுத்து விட முடிவதில்லை. அந்த வகையில் பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷின் மரணம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் இவற்றைப் பொருட்படுத்தாது சில சந்தர்ப்பங்களில் மறைத்து விடவும் பார்க்கிறார்கள்.

குற்றங்களை அப்படியே வெளியே காட்டி திருத்த முயல்வதே ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு உதவும்.

★


**NEW SCIENCE ACADEMY**

NALLUR

**A/L 99**

கணக்கியல்

யாழ்,
முன்னணி ஆசிரியர்
கட்டுப்பாட்டுக்கணக்கு

ஆரம்பம்: 06-11-97
வியா. 6-30

(50978)



**BOSCO INSTITUTE**

25, றக்கா வீதி,

விசேட சிங்களம்
BY: செல்வி தர்சினி

ஆரம்பம்:
07-11-97
[illegible]

(50974)



# நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையம்

**05 - 11 - 97** இல் இருந்து அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்:

ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | — | N. சத்தியபாலன் |
| விஞ்ஞானம் | — | A. ராகவன் |
| கணிதம் | — | S. தேவறஞ்சன், பாலா |
| தமிழ் | — | K. அருண் |
| சமூகக்கல்வி | — | N. மனோகரன் |
| வர்த்தகம் | — | S. தேவா |

மற்றும் க. பொ. த. (உ/த) கலைப்பிரிவுக்கான

★ அரசியல் ★ புவியியல்
★ தமிழ் ★ அளவையியல்

முதலான பாடங்களும் கற்பிக்கப்படவுள்ளன.

நிர்வாகி

தொடர்பு:
882, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி-1963)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கடைசிநேர அவகாசம்

இலங்கை சுதந்திரமடைந்த ஐம்பது ஆண்டு நிறைவு அடுத்த வருடம் பெப்ரவரி நான்காம் திகதியாகும். பிரிட்டிஷ்காரரிடம் இருந்து கிடைத்த சுதந்திரம் சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியதாக்கப்பட்டு விட்டது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

சுதந்திரம் என்ற சொல் தரும் பொருள்களின், அர்த்தங்களின் நிறைவான உரிமைகளை சிங்கள மக்கள் மட்டுமே அனுபவிக்கிறார்கள். அவர்களுடன் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சிறுபான்மையினர் என்று பட்டம் சூட்டப்பட்டு, சுதந்திர சம அந்தஸ்து இல்லாத நிலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இதனாலேயே இந்த நாட்டில் இப்போது இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களை சம அந்தஸ்துள்ள முதலாந்தரப் பிரஜைகள் என்ற நிலையிலிருந்து பின் தள்ளிவிட்டு, காலால் உதைத்துத் தள்ளிவிட்டு, இரண்டாந் தரப்பிரஜைகளாகவே கொழும்பு அரசுகள் நடத்தி வந்தன. இப்போது கூட அதுவே தொடர்கிறது; திருத்தம் இல்லை.

இத்தகைய சூழ்நிலையில் சுதந்திரப் பொன்விழாவை சகல இன மக்களும் மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக, உள்ளார்ந்த உணர்வுடன் கொண்டாடுவர் என்று எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படவில்லை. அவை வழங்கப்பட வேண்டும்; வழங்குவோம்; என்று ஆட்சி பீடம் ஏறிய இந்த அரசு மூன்று வருடங்கள் கடந்தும் இன்னும் ஆக்கபூர்வமான எதனையும் செய்யவில்லை.

தமிழர்கள் அழிக்கப்படும், அகதிகளாக்கப்படும், அவலமுறச் செய்யப்படும் நிலை தானும் இன்னும் நீங்கவில்லை; நீக்கப்படவில்லை!

சுதந்திரப் பொன்விழா வருவதற்கு முன்னர் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அரசு விரும்புகிறது. நல்லது தான். ஆனால் அது கொண்டாட்டத்துக்காக மட்டுமா? வெளிநாடுகளிடம் நற்பெயர் பெறுவதற்காகவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஐம்பதாவது சுதந்திர தின விழாவுக்கு முன்னர் தமிழர்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டு விடுமா? அரைவேக்காட்டுத் தீர்வு இல்லாமல் தமிழர்கள் சுதந்திரமான, சுயகௌரவமான, நாமும் இந்நாட்டின் பிரஜைகள் என்ற உணர்வு பெற வழி சமைக்கும் நிறைவான தீர்வு வருமா?

ஐக்கிய தேசியக் கட்சியையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் அரவணைத்து, இணைத்து ஒரு தீர்வைக் கொண்டுவரக் கூடிய சக்தியும், விருப்பமும், இதய சுத்தியும் அரசுக்கு உண்டா? என்பதிலேயே பொதியின் விதி தங்கி உள்ளது.

கடந்த ஐம்பது வருடங்களாகக் காண முடியாத தீர்வை மூன்று மாதங்களுக்குள் கண்டு விட முடியுமா, என்ன?

சுதந்திரப் பொன் விழாவை எல்லா மக்களினதும் மனமார்ந்த விருப்பத்துடன் உணர்வு பூர்வமான பங்களிப்புடன் கொண்டாட சந்திரிகா அரசு விரும்பியிருந்தால் —

ஆட்சிக்கு வந்தவுடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சரியாகத் திட்டமிட்டு, சரியானவழியில், சரியான அணுகுமுறையுடன் செயற்பட்டிருக்க வேண்டும்.

கால் மாறி நடந்தும், தப்புத் தாளம் போட்டும் காலம் கரைந்த பின்னர் கடைசி நேரத்தில் அவசரப்படுவதால் நல்ல பெறுபேறு கிடைக்குமா? சந்தேகமே!

# ராகிங்கை தடுக்கும் சட்டத்தை உடன் அமுல் செய்ய வேண்டும்!

## தனியார் பாடசாலை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

நெடுந்தீவு, நவ. 5

பல்கலைக்கழகங்களில்இடம் பெறும் ''ராகிங்'' எனப்படும் பகிடிவதையை முற்றாக நீக்கக் கூடியதான சட்ட விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள்சங்கம் உயர்கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு கோரியுள்ளது.

தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் வீ. யுக பாலசிங்கம், செயலர் ஆர். திலகரட்ணம் ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்த இம் மகஜரில் தெரிவிக்கப்படடிருப்பதாவது:-

செ ன். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் செ. வரப்பிரகாஷ் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சிலரின் கொடூரமான பகிடிவதைக்கு உள்ளாகி மரணமான சம்பவம் தாங்கள் அறிந்ததே.

இது தொடர்பாக கூடிய விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தாங்கள் விடுத்திருந்த செய்தியை பத்திரிகை மூலம் அறிந்தோம்.

தங்கள் கூற்று கருத்தளவோடு நிற்காது விரைவில் ராகிங்கை முற்றாக நீக்கக் கூடியதான சட்டத்தை உருவாக்குவீர்கள் என எதிர் பார்க்கின்றோம் — என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-111)

## ராகிங்கை தடுக்கும் சட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 5

'பல்கலைக்கழகங்களில்பாரதூரமான ''ராகிங்'' நடைபெறுவதை முற்றுமுழுதாகத் தடுத்து நிறுத்துவதற்கான சட்ட திட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எண்ணியுள்ளேன்.'

கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் மனிதத்தன்மையற்ற மாணவர்களும் இருக்கிறார்கள்.

நாம் விலங்குகளில் இருந்து மாறுபட்டுச் சிந்திக்கும் தன்மையுடையவர்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷ் ராகிங்கினால் மரணமானார். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் எவருக்குமே நடைபெறக் கூடாது என்பது தான் சகலரினதும் எதிர் பார்ப்பாகும்.

ராகிங்கைத் தடைசெய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் அதற்கான சட்ட முன்வரைவுகள் சமர்ப்பிக்கப்படும் — என்றும் அமைச்சர்தெரிவித்தார்.

## நாடு முழுவதும் பலத்த மழை!

நாடு முழுவதிலும் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்ததால் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நெற்காணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக மழை பெய்ததால் வீடுகள் பல நீரில் மூழ்கியுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் பல வீதிகளில் போக்குவரத்து செய்ய முடியாமல் போயுள்ளது.

தற்போதைய காலநிலை இன்னும் மூன்று வாரங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட முற்பகுதியில் நாட்டில் வரட்சி நிலை தோன்றும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ-9)

## விசாரணைக் குழு மீண்டும் யாழ். வரும்

யாழ்ப்பாணம், நவ. 5

குடாநாட்டில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு நியமித்த விசாரணைக்குழு மீண்டும் யாழ்ப்பாணம் வர விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்குழு ஏற்கனவே மேற்கொண்ட விசாரணைகளில் சாட்சியம் அளிக்காதவர்களை புதிய விசாரணைகளில் சாட்சியமளிக்க வசதியாக தமது விவரங்களை யாழ். செயலகத்தில் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# நவீன உலகத்துடன் இணைய கணனித் துறை எமக்கு அவசியம்

## கணனிப் பிரிவு தொடக்க விழாவில் உரை

நெடுந்தீவு, நவ. 5

வளர்ந்து வரும் நவீன உலகத்துடன் நாமும் இணைந்து கொள்ள வேண்டியுள்ளதால் இளைய தலைமுறை கணனியுகத்துள் தம்மை நுழைத்துக் கொள்ள வேண்டும்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கணனிப் பிரிவை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஈ.பி.டி.பி. கட்சியின் தீவுப் பகுதிப் பொறுப்பாளர் என். மனோகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி [illegible] மையில் கடந்த 24 [illegible] கணனிப் பிரிவு ஆரம்ப விழா நடை பெற்றது.

திரு. மனோகரன் மேலும் பேசும் போது கூறியதாவது:-

எதிர்காலத்தில் பல சாதனைகளை புரியக் கூடிய வகையில் விஞ்ஞானக் கல்வியில் மாணவர்கள் போதிய பயிற்சியும், அறிவும் பெற வேண்டும். அதே வேளை எமது பாரம்பரிய கலைகளைக் காக்கும் பொறுப்பும் தமக்கு உண்டு என்பதையும் அவர்கள் மறக்கக் கூடாது. இன்று ஆரம்பிக்கப்படும் கணனித் தொகுதியில் சிறந்த பயிற்சிகளைப் பெற வேண்டும். இந்த ஆண்டில் [illegible] வழங்க வுள்ளோம். அதிலும் போதிய பயிற்சி பெறுவீர்கள் என எதிர் பார்க்கின்றோம் — என்றார்.

நெடுந்தீவு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் பேசும் போது கூறியதாவது:-

கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்களால் மாணவர்கள் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வழி கிடைக்கும். விஞ்ஞான மேம்பாட்டுடன் 21 ஆம் நூற்றாண்டுக்குள் செல்லவிருக்கும் உலக மக்களுடன் நெடுந்தீவு மாணவர்களும் இணைந்து செல்லக் கூடியதாக கணனித் தொகுதியைப் பயன்படுத்த வேண்டும் — என்றார்.

(ஐ-111)

## மோ.சைக்கிளில் தீ பற்றியது

மல்லாகம், நவ. 5

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கியது. இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இணுவில் சந்தைக்கு முன்பாக இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் உடனடியாக அதை நிறுத்தி அருகில் நின்றவர்களின் உதவியுடன் வீதியில் தேங்கிநின்ற வெள்ள நீரினை ஊற்றித் தீயை அணைத்தார்.

(ஐ-86)

### புலிகளுக்கு லஞ்சம் கொடுத்து

## சிப்பாயை மீட்டுத் தருவதாக சகோதரியிடம் பண மோசடி!

### சமுர்த்தி முகவர் கைது!!

கொழும்பு, நவ. 5

விடுதலைப் புலிகள் வசமுள்ள படை வீரர் ஒருவரை மீட்டுத்தருவதாகக் கூறி அந்தப் படை வீரரின் சகோதரியை ஏமாற்றிப் பணமோசடி புரிந்த சம்பவம் ஒன்று வெல்லவாய பொலிஸ் பிரிவில் இடம் பெற்றது. மோசடி புரிந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகப் புலிகளுக்கு லஞ்சம் கொடுத்து சகோதரரை மீட்டுத் தருவதாகக் கூறிய நபர் ஒருவரே பிரஸ்தாப பெண்ணிடம் இருந்து 35 ஆயிரம் ரூபா பணத்தையும் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் அபகரித்துள்ளார்.

சமுர்த்தி முகவரான பிரஸ்தாப நபர் பணத்தைப் பெற்றுச் சென்று ஆறு மாதங்கள் கடந்தும் தமது சகோதரன் வந்துசேராததை அடுத்து அப் பெண் வெல்லவாயபொலீஸில் முறைப்பாடுசெய்தார். அதனையடுத்தே மோசடி புரிந்த நபரை பொலீஸார் கைது செய்தனர்.

1995 ஆம் ஆண்டு மண்டைதீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போதே மேற்படி பெண்ணின் சகோதரரான படை வீரர் விடுதலைப் புலிகளிடம் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-164)

## 18 தங்க பிஸ்கட்டுக்களை விற்க முயன்றோர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 5

தங்க பிஸ்கட்டுக்களை வைத்திருந்ததாகவும், அவற்றைவிற்பதற்கு முயன்றதாகவும் குற்றஞ்சாட்டிமூவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டனர்.

தங்க பிஸ்கட்டுக்களை வைத்திருந்ததாக நாவாந்துறையைச் சேர்ந்த இராசையா ரஞ்சன் என்பவரும், அவற்றை விற்பதற்கு உதவியதாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான சிவம் சுப்பிரமணியம், இராமதாஸ் குகதாஸ் ஆகியோருமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டனர்.

யாழ். நீதிபதி ஏ.என்.இராமச்சந்திரன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பொலீஸார் அனுமதித்ததன் பேரில் 5 ஆயிரம்ரூபா உறுதிப்பிணையில் மூன்று பேரும் விடுவிக்கப் பட்டனர்.

24 கரட் பெறுமதியுடைய இந்தத் தங்க பிஸ்கட்டுக்கள் ஒவ்வொன்றும் 14 பவுண் எடை கொண்டவை எனத் தெரிவிக்கப்பட்டது.

நாவாந்துறைப் பகுதியில் உள்ள பங்கர் ஒன்றில் இருந்து 18 தங்க பிஸ்கட்டுக்களைத் தாம் எடுத்ததாகச் சந்தேக நபர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் பருத்தித்துறையில் உள்ள நகைக் கடை ஒன்றில் உருக்கிய நிலையில் இருந்த ஒரு பகுதி தங்கத்தைக் கைப்பற்றினர் என்றும் —

சந்தேக நபர் ஒருவரின் மனைவியிடம் இருந்து 70 ஆயிரம் ரூபாவைப் பொலீஸார் கைப்பற்றியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-3)

## நாளை

ஐப்பசி 20

வியாழக்கிழமை

திதி: ஷஷ்டி

பிற்பகல் 3.07 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

பின் இரவு 5.06வரை.

கந்தஷஷ்டி விரதம்

சுபநேரம்: 7.35-9.05

ராகுகாலம்: 1.35-3.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் 3 ஆவது வரவுசெலவு திட்டம் இன்று பிற்பகல் சபையில் சமர்ப்பிப்பு

## புதிய பொது விற்பனை வரி அமுலுக்குவரும்

கொழும்பு, நவ. 5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு - செலவுத்திட்டம் இன்று பிற்பகல் 2-30மணிக்கு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவிருக்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பொது விற்பனை வரி ஒன்றை அடுத்த ஜனவரி முதல் அறவிடும் அறிவிப்பு ஒன்று வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வரவு செலவுத் திட்டத்தில் கைத்தொழில்' விவசாயம், சுயதொழில் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையான 99.5 மில்லியனில் பெரும்பகுதி கடன் மூலம் சமாளிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

யுத்த செலவீனம் வழமை போல் 45 மில்லியனாகவே யிருக்கும். அதில் மாற்றம் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

துண்டுவிழும் தொகையை சமாளிக்க பல மானியங்கள் அகற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3-9)

## வெட்டிக் கொலை

தமிழ் நாட்டின் நெல்லை மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரகாசன் (வயது 26) என்ற வாலிபர் வெட்டிக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

அகதி முகாமுக்குள் மது போதையில் வந்து பெண்களைக் கேலி செய்த நபர் ஒருவரை இவரும் வேறுசிலரும் சேர்ந்து வெளியேறினர் என்றும்—

அதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் மறுநாள் சந்திரகாசனை அரிவாளால் வெட்டிக் கொன்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரை வெட்டிக் கொன்ற பேச்சி என்ற வாலிபரை பொலீஸார் தேடிவருகின்றனர். (ஐ)

# பூவரசங்குளம்-துணுக்காய் வீதியை உடனே திறக்கும் சாத்தியமில்லை

வவுனியா, நவ. 5

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து வவுனியாவுக்குச் செல்வதற்காக பூவரசம்குளம் — துணுக்காய் வீதியை உடனடியாகப் போக்குவரத்துக்காகத் திறக்கும் சாத்தியம் இல்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உயிலங்குளம் ஊடாகப் பொது மக்களும், மடு வீதி வழியாக வாகனங்களும் வவுனியாவுக்குச் செல்ல போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்குப் புறம்பாக பூவரசங்குளம்— துணுக்காய் பாதையை பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் இப் பாதையில் பறங்கியாறு குறுக்கிடும் இடத்தில் உள்ள பெரிய பாலம் ஒன்று புனரமைக்கப் படவேண்டி உள்ளது. அப் பாலத்தை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதி வழங்கவில்லை எனத் தெரியவருகிறது. அத்துடன் பறங்கியாற்றில் தற்போது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் பொதுமக்கள் இப் பாதையைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆயினும் எவ்வாறாயினும் இப் பாதையைத் திறப்பதில் விடாப்பிடியாக இருக்கும் சில அதிகாரிகள் முதலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் போக்குவரத்தை இவ் வழியாக ஆரம்பிப்பதற்கு தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஐ-164)

# புத்தளம் அனல்மின் நிலையம்; மேற்றிராணியர் ஆட்சேபம்!

## ஜனாதிபதிக்கு அவர் கடிதம்

கொழும்பு, நவ. 5

புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலையில் அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டத்தை கைவிடுமாறு இலங்கை கத்தோலிக்க மேற்றிராணியார் அதிவண. நிக்கலஸ் மாக்கஸ் பெர்னான்டோ ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நிலக்கரி மூலம் இயங்கும் இந்த மின் உற்பத்தி நிலையத்தினால் அப்பிரதேசத்தின் சூழல் மாசடைந்துவிடும். உள்ளூர் பொருளாதாரத்தை அது பாதிக்கும் என்றும் மேற்றிராணியார் தமது கடிதத்தில் கவலை தெரிவித்துள்ளார்.

இந்த மின் நிலையம் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அப் பகுதி மக்களுக்கு நிரந்தர அச்சுறுத்தலாக அமைந்துவிடும். அத்துடன் அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை அழித்துவிடக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு நீரினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் தங்கியிருப்பதைக் குறைக்கும் நோக்கில் புத்தளத்தில் இந்த அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-9)

# சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 5

இலங்கை திறந்த பல்கலைகழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தப்பட விருக்கும் "தொழிலுரிமையும், சிறுவணிக முகாமைத்துவமும்" கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்களை யாழ். மத்திய கல்லூரியிலும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் இயங்கும் தற்காலிக அலுவலகங்களில் நூறு ரூபா செலுத்திப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறியை 94 - 95 ஆம் கல்வியாண்டில் பெற்றவர்களுக்கான இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும் என்று யாழ். பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்தார். (ஐ-3)

# யாழ். புனரமைப்புக்கு ரூ. 10 கோடி வழங்க ஐ. நா. அதிகாரி இணக்கம்

யாழ்ப்பாணம், நவ. 5

குடாநாட்டில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்புத்திட்டங்களுக்கு 10 கோடி ரூபா நிதியை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இணங்கியுள்ளது.

இந்த வருடம் மூன்று கோடி ரூபா செலவில் இங்கு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள இந்த அமைப்பின் ஜெனிவா தலைமை அலுவலக அதிகாரி டேவிட் மேற்கண்ட உதவியை வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் இவ் வருடம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்த அவர் குடாநாட்டில் அடுத்த வருடம் மேற் கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்து செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த அமைப்பின் கொழும்பு அலுவலக அதிகாரிகள் இருவரும் இவருடன் கூட வந்துள்ளனர்.

கடந்த ஒருவாரமாக இவர்கள் இங்கு தங்கியுள்ளனர். (ஐ-3)

## 7 மாணவ...

(முதலாம் பக்கத் தொடர்)

வான் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வரப்பிரகாஷின் மரணம் குறித்து விசாரணை நடத்தி வரும் பல்கலைக்கழக ஒழுங்காற்றுக்குழு சமர்ப்பித்த விண்ணப்பத்தையும் நீதிவான் நிராகரித்தார்.

விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களிடமிருந்து சிறையில் வைத்து அல்லது வெளியில் வைத்து வாக்குமூலம்பெற அனுமதி வழங்கும்படி கோரியே மேற்படி குழு மனுத்தாக்கல் செய்திருந்தது.

அதேநேரம் —

இந்த மரணம் தொடர்பான முக்கிய சந்தேகநபராகக் கருதப்படும் சதீஸ்கரன் என்ற மாணவன் நேற்றுவரை சரண் அடையவுமில்லை; கைது செய்யப்படவும் இல்லை என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21-3)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்)

நாளில் இருந்து ஒரு மாத காலத்துக்குள் அமெரிக்க நீதி மன்றத்தில் மனுச் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தியே புலிகள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்ய புலிகளின் சட்டத்தரணிகள் சிலர் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

"எமது அமைப்பு பயங்கரவாத இயக்கம் அல்ல. ஒரு விடுதலை தேசிய இயக்கம். எமது அமைப்பால் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலோ, பங்கமோ இல்லை" — இப்படி தமது மனுவில் புலிகள் குறிப்பிடுவர் என்றும் தெரியவந்தது.

அமெரிக்காவில் வசிக்கும் பிரபல சட்டத்தரணிகள் சிலர் புலிகள் சார்பில் இந்த வழக்கில் ஆஜராகி வாதிடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## துப்புக்..

(முதலாம் பக்கத் தொடர்)

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் களில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இரத்மலானை விமானத் தளத்துக்கு அருகே உள்ள வீடு ஒன்றில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து அதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் வவுனியாவில் வைத்து இருவரை பொலீஸார் கைது செய்திருந்தனர்.

தந்தையும், மகனுமான அவர்கள் இருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பின்னர் மகன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரது தந்தையாரான சிவரத்தினம் சிவராசா (வயது 43) என்பவர் கல்கிசைப் பொலீஸ் நிலையத்தில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் - என்றும்—

கடந்த மாதம் 31 ஆம் திகதி கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் கடந்த ஞாயிறன்று அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-21)

# புதுமுறிப்பில் இருவர் படையினரிடம் சிக்கினர்

வவுனியா, நவ. 5

கிளிநொச்சி மாவட்டம் புதுமுறிப்பு என்னுமிடத்தில் வைத்து கடந்த 31 ஆம் திகதி படையினரிடம் சிக்கிய இருவரில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திருச்செல்வம் (வயது 42), சண்முகசுந்தரம் (வயது 39) ஆகிய இருவருமே படையினரிடம் சிக்கியவர்களாவர்.

படையினர் இவர்கள் இருவரையும் 7ஆம் வாய்க்காலுக்குக் கொண்டு சென்றனர் என்றும்—

பின்னர் அங்கு வைத்து அவர்கள் சுடப்பட்டதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

சுடப்பட்ட பின்னர் மலக்குழி ஒன்றுனுள் போடப்பட்ட திருச்செல்வம் என்பவர் மயக்கம் தெளிந்து ஒருவாறு அக் குழியில் இருந்து வெளியேறி இரு நாள்களின் பின் புதுமுறிப்புக்கு சென்று சேர்ந்ததாகவும்—

சண்முகசுந்தரம் என்பவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-164)

## அமெரிக்க கொடியை எரிக்க முயற்சி

சென்னை, நவ. 5

சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக அமெரிக்கத் தேசியக் கொடியை எரிக்க முயன்ற தமிழ் நாடு மார்க்ஸிச லெனினிஸக் கட்சியைச் சேர்ந்த 69 பேர் கடந்த 27 ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## துணுக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளன. இப்பகுதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 5 நாள்களாகப் பெய்த மழையினால் இரணைமடுக் குளத்தில் நீர் மட்டம் 17 அடி 6 அங்குலம் உயர்ந்துள்ளது. அக்கராயன் குளத்தில் 9 அடி மூன்றரை அங்குலமும் கல்மடு குளத்தில் 9 அடி 6 அங்குலமும், கனகாம்பிகைக் குளத்தில் 5 அடி 5 அங்குலமும், வன்னேரிக்குளத்தில் 3 அடி 8 அங்குலமும். விசுவமடுக்குளத்தில் 8 அடி 8 அங்குலமும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. (ஐ-164)

## கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இத்தாக்குதலில் அதில் பயணம் செய்த 53 ஆவது படையணியைச் சேர்ந்த ஐந்து கொமாண்டோக்களும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் விடுதலைப்புலிகள் மூவர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 11 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org